# ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் நிரந்தர தர்சனத்தின் அவசியம் - 6

## அதீதாகமம் / அத்யாகமம்/ஆகமவிலக்கு என்னும் கோயில் வழக்கமும் - ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதரும் .....

நமது பாரத தேசத்தில் பரவலாக **அனைத்து ஆலயங்களும் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு, ஆகம விதிகள் தரும் வழிகாட்டுதல்கள் படி நித்ய பூஜை, பட்ச, மாஸ, வருடாந்திர உஸ்தவங்கள் நடைபெற்று வருவது** வழக்கம். ஆகம விதிப்படி ஒவ்வொரு தெய்வதிருமேனிகளுக்கும் கோயிலில் ஸ்தானங்கள் நிர்ணயம் செய்யபட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஆகமங்கள் நமக்கு கூறுகின்றன. **ஆனால் சில கோயில் ஆகமங்கள் நமக்கு காட்டும் வழியில் இல்லாமல் பல விஷயங்கள் மாறி இருக்கும். இப்படி ஆகமத்திற்கு அன்னியதாக உள்ள விஷயங்களுக்கு அதீதாகமம் / அத்யாகமம் அல்லது ஆகமவிலக்கு என்னும் கோயில் வழக்கம் என்று பெரியோர்கள் கூறுவர்.** ஆனால் இவ்வாறு **அதீதாகமம் / அத்யாகமம் நிகழ்வுகளுக்கு பின் கண்டிப்பாக ஒரு காரணம் இருக்கும்** அதுவும் அந்த காரணம் அந்த **கோயிலின் வரலாற்றில் அதாவது ஸ்தல புராணத்தில் நேரடியாகவே சம்பந்தப்பட்ட ஒரு சம்பவமாக /விஷயமாக/ நிகழ்வாக இருக்கும்.** அதனால் தான் **இவ்விஷயங்கள் அல்லது சில நிகழ்வுகள் அதிதாகம / அத்யாகமம் /ஆகமவிலக்கு பெற்ற அதாவது கோயில் வழக்கம் என்று பெரியோர்களால் நிர்வாகம் செய்யப்பட்டுள்ளன.**

உதாரணத்திற்கு அதிதாகம/அத்யாகமம் என்னும் கோயில் வழக்கம் உள்ள சில கோயில்களை பார்ப்போம்.

1. **திருநாங்கூர் ஸ்ரீ வைகுண்ட விண்ணகரம் திவ்ய தேசம்.** இந்த திவ்ய தேசம் பற்றிய விவரங்கள் பாத்ம புராணத்தில் உள்ளது மற்றும் திருமங்கையாழ்வார் அவர்களால் பாடல் பெற்றது. **எல்லா பெருமாள் கோயில் போன்று இங்கு பெருமாளின் நேர் எதிரில் கருடாழ்வார் இருக்கமாட்டார் ஆதாவது கருடாழ்வார் சன்னதி பெருமாளின் முன்பு இருக்காது.** இதற்கான **காரணம் இந்த கோயில் ஸ்தல வரலாற்றில் உள்ளது.** அதனால் இது அதிதாகம/அத்யாகமம் என்னும் கோயில் வழக்கம் உள்ள கோயிலாகும்.
2. கும்பகோணம் **ஸ்ரீ ஆராவமுதன் கோயிலில் இன்றும் ப்ரதி வருடம் ஐப்பசி மாதம் அமாவாசை அன்று ஆராவமுதன் பெருமாளே விதிப்படி தனது கோயிலில் தனக்கு ஆதி காலத்தில் சேவை செய்த நாராயணன் என்னும் பக்தருக்காக திதி / திவசம் தருகின்றார். இதுவும் ஆகமங்களில் இல்லாத விஷயம்தான் ஆனால் பெருமாளின் உத்தரவு படி, ஸ்தல வரலாறு படி இன்று நிகழும் ஆசாதாரணமான நிகழ்வு.** அதனால் இது அதிதாகம/அத்யாகமம் என்னும் கோயில் வழக்கம் உள்ள கோயிலாகும்.

3. ஒரு பெருமாள் கோயிலில், **தாயார் சன்னதிக்கான ஸ்தானத்தில் இருக்கும் தாயார் சன்னதியில் ஒரு தாயார் தான்** இருப்பது ஆகம வழி. **ஸ்ரீரங்கத்தில் இன்றும் ஸ்ரீ ரங்கநாயகி தாயார் சன்னதியில் ஆதி ரங்கநாயகி தாயாரும், படையெடுப்பு சமயத்தில் மாற்று தாயாராக ஆராதனத்தில் இருந்த தாயார் என்று இரண்டு தாயார்களை** இன்றும் ஆராதனத்தில் இருந்து நாம் தரிசனம் செய்கின்றேம். இதில் ஒரு தாயாருக்கு "**கலக கால தாயார்**" என்று ஸ்ரீரங்கத்தில் ஒரு அழைக்கும் வழக்கம் உண்டு. இதுவும் **அதீதாகமம் /அத்யாகமம் என்னும் கோயில் வழக்கமாகும்.** ஆபத்து காலத்து தர்மம் என்று ஏற்பட்ட **கோயில் வழக்கம்.**
4. பொதுவாக சிவன் கோயிலில் மூலவராக லிங்கம் தான் இருப்பது ஆகமவிதி. ஆனால் **வேதாரண்யம், சீர்காழி தோனியப்பர், திருவதிகை** முதலான ஷேத்ரங்களில் **மூலஸ்தானத்தில் லிங்கம் மட்டுமில்லாமல் பார்வதி உடன் சிவபெருமான் அர்ச்சாவதாரமாக தரிசனம்** தருகிறார்கள். இவற்றிற்கு இந்த கோயிலின் ஸ்தல வரலாற்றில் ப்ரமாணங்கள் உள்ளன. அதனால் இதுவும் **அதீதாகமம் /அத்யாகமம் என்னும் கோயில் வழக்கமாகும்.**
5. பொதுவாக **சிவன் கோயிலில் நந்தி தேவர் சிவனுக்கு நேர் எதிரான மூலஸ்தானத்தில் இருக்கும் லிங்கத்தை பார்த்தவாறு இருப்பது ஆகம விதி**. ஆனால் **திருமூல்லைவாயில் சிவன் கோயிலில் நந்தி தேவர் சிவனை பார்பது போல் இல்லாமல் அதற்கு நேர் எதிராக இருப்பார்**. இந்த கோயில் **ஸ்தல வரலாறு படி சிவபெருமானின் உத்தரவு படி தொண்டைமான் சக்ரவர்த்திக்கு துணையாக போருக்கு செல்ல தயாராக நந்தி தேவர் வாசலை பார்த்து இருக்கின்றார்** என்பது இக்கோயிலின் வழக்கம். அதனால் இதுவும் **அதீதாகமம் / அத்யாகமம் என்னும் கோயில் வழக்கம்.**
6. **திருப்புங்கூரில் சிவபெருமானின் நேர் எதிராக இருக்க வேண்டிய நந்தி தேவர் நந்தனாருக்காக இன்றும் சிறிது விலகியிருப்பார்.** அதுபோல **திருவிடைமருதூரில் மேற்கு ராஜகோபுத்தின் நுழைவுவாயிலில் ப்ரும்மஹாத்தி இருப்பதாக** உள்ள ஸ்தல வரலாறு படி **இன்றும் இந்த ராஜகோபுரம் கதவு முடியே இருக்கும்.** இதன் வழியாக யாரும் செல்ல முடியாது. இதுவும் **அதீதாகமம் /அத்யாகமம் என்னும் கோயில் வழக்கம்**

மேற்கண்ட சில அதிதாகம /அத்யாகமம் என்னும் கோயில் வழக்கம் பற்றிய உதாரணங்கள் அனைத்து அந்த கோயிலுடன், அதன் ஸ்தல வரலாற்றுடன் சம்பந்தப்பட்டவைகள் அதாவது அப்படி இருப்பதற்கு ப்ரமாணம் **(Proof)** உள்ளதால் கோயில் வழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை.

**காஞ்சிபுரம் ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் விஷயமாக நாங்கள் விசாரித்த வகையில், நாங்கள் புரிந்து கொண்ட சில விஷயங்கள்..........**

- கிபி **1780ம்** ஆண்டு அனந்தஸரஸில் ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
- கிபி **1937 ல் முதன் முறையாக சுமார் 48 நாள் ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் தர்சனம்.**
- பிறகு **42** வருடங்கள் கழித்து **1979ல்** கழித்து **2வது** தரிசனம்.
- பிறகு **40** வருடங்கள் கழிந்து இப்போது **2019-ஆம் ஆண்டு 3வது முறையாக 48 தினங்கள்** தர்சன விழா தற்போது நடைபெற்ற வருகிறது.
- **1937 முன்பு 40-42 வருடங்களுக்கு ஒருமுறை 48 நாள் தரிசனம் உஸ்தவம்** என்பது நடை பெற்றதற்கான விபரங்கள் நாங்கள் விசாரித்த அளவிற்கு கிடைக்கவில்லை.
- மேலும் **1937 ஆண்டிற்கு முற்பட்ட காஞ்சிபுரம் வரதர் கோயில் சம்பந்தப்பட்ட பழைய புகைப்படங்களில் இன்று நாம் பார்க்கும் அத்திவரதர் அனந்தஸரஸில் எழுந்தருளும் மண்டபம் இடம்பெறவில்லை** என்பது தகவல்.
- இதில் இருந்து இந்த **அனந்தஸரஸ் அத்திவரதர் மண்டபம் 1937 சமயத்தில் நிர்மாணம் செய்ய பட்டு இருக்க வேண்டும்** என்பது பலரின் கருத்து.
- இதனால் இந்த தரிசன உஸ்தவம் சுமார் **80** ஆண்டுகள் முன்பு ஏற்பட்டுள்ளது என்பது பலரின் யூகம்.
- மேலும் குளத்தினுள் அத்திவரதரை எழுந்தருள செய்த பின், மரத்தினால் ஆன அந்த மூர்த்தி நீரில் மிதக்காத வண்ணம் கல்லினால் செய்யப்பட்ட **8** நாகர்கள் துணையுடன் கம்பியால் கட்டி நீரில் மூழ்கி இருக்குமாறு வைத்துள்ளார்கள் என்பது தற்போது பெருமாள் குளத்தில் இருந்து மீண்டும் பக்தர்களுக்கு தரிசனம் செய்ய எழுந்தருளிய சமயத்தில் பத்திரிகை செய்தி கூறுகிறது.
- எதோ ஒரு காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக அனந்தஸரஸில் அத்திவரதரை எழுந்தருள செய்துள்ளனர் என்பது மட்டும் தெளிவாக தெரிகிறது.
- ஆனால் **அங்கபின்னம் இன்றி இருக்கும் இந்த மூர்த்தியை 40-42 வருடத்திற்கு ஒரு முறை குளத்தில் இருந்து வெளியே தரிசனத்திற்கு வைக்கும் வழக்கம் ஆகமங்களிலோ அல்லது அதீதாகமம் /அத்யாகமம் /ஆகமவிலக்கு என்னும் கோயில் வழக்கம்** சார்ந்ததாக **நாங்கள் விசாரித்த வகையில், நாங்கள் புரிந்து கொண்ட அளவில் இல்லை .**
- **ப்ரமாணங்கள் அடிப்படையில் ஏற்படுத்த பட்ட கோயில் வழக்கங்கள் பற்றிய ஆழ்ந்த ஞானம் உள்ள பெரியோர்கள் இதற்கு சரியான தீர்வு காண**

**முடியும் என்று நம்புகிறோம்.**

இவ்வாறு **ஆழ்வார்கள், ஆச்சார்யார்கள் வைபவத்தில் இரண்டறக் கலந்து இருக்கும் இப்பெருமாளை ஏதோ ஒரு காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக அனந்தஸரஸில் ஆதி அத்திகிரீ வரதரை எழுந்தருள செய்துள்ளனர்.** இந்த **அனந்தஸரஸில் பொதுமக்கள் நீராடுவார்கள், கால் சுத்தம் செய்வார்கள்.** அப்படிப்பட்ட அந்த குளத்தினுள் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆதாரமானவரும், ஆழ்வார்கள், ஆச்சார்யார்களால் கொண்டாடப்படும் **ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை பகவத் ஸ்ரீ ராமானுஜரின் 1000 வது திருநட்சத்திரம் , ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர் 750வது திருநட்சத்திரம் வைபவமாக கொண்டாடப்படும் இச்சமயத்தில் மீண்டும் எழுந்தருள செய்வது எங்களை போன்ற பக்தர்களுக்கும், வைஷ்ணவ பாகவதோத்தமர்களுக்கும் மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுகிறது.**

மேலும் இந்த கோயில் ஸ்தல வரலாறு, கல்வெட்டு குறிப்புகள் படி இவரே ஆதி மூலவர். இப்படி பல வைபவங்கள் உடைய இவரை தரிசனம் செய்வது நாம் கண்களை பெற்ற பயன். **பிறவியிலேயே கண் பார்வை இழந்த ஒருவருக்கு கண் பார்வை கிடைத்து, அது மீண்டும் இழந்தால் அவருக்கு எப்படி இருக்குமே அப்படி உள்ளது பக்தர்கள் நிலை.**

**கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்....நம் கூரத்தாழ்வாருக்கு கண்ணளித்து தன்னைக் காணச்செய்த இந்த பெருமாளை தரிசனம் செய்து கொண்டே இருப்பதுதானே நாம் கண்கள் பெற்ற பயன்.**

ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை தரிசனம் செய்ய உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருடம் முழுவதும் வருகை புரிவார்கள். அதனால் நமது காஞ்சீபுரம் மற்றும் வரதர் கோயில் மேலும் மேலும் புகழ் பெறும்.

நமது நாடும், நமது திருக்கோயிலும் பல பெருமைகள், நன்மைகள் அடைய ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் தர்சன வைபவம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற **பக்தர்கள் ப்ராத்தனைகளை திருக்கோயில் முக்கியத்தர்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அத்யாபக கோஷ்டியினர், ஸ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள்,**

இந்து அறநிலையத்துறை, தமிழக அரசு என்று அனைவரும் ஒன்றுபட்டு செவி சாய்த்து பக்தர்களின் பிராத்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.




**Conjeverum Temple & Tank**
1850s to 1870s Kanchipuram, India
Photographer: Francis Frith (1822-1898)


ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தானம்
காஞ்சிபுரம்-631503
அரிய ஸேவை
2-7-79 முதல் 18-8-79 வரை



THE HINDU, Tuesday, July 3, 1979.

# Athi Varadar Taken out of Kanchi Tank for Worship

MADRAS, July 3.

After four decades, the 2.5 metre long fig wood idol of Lord Varadaraja (see picture to the right), identical to the awe-inspiring stone image of the Lord in the sanctum sanctorum of the temple at Kancheepuram, was unveiled for public worship at the temple early this morning, amidst the recital of special hymns and invocation.

All these 40 years, Athi Varadar was kept immersed in a special vault made of granite below a mandapam in Anantha Saras, the temple tank. (See the spot marked by an arrow in the picture below).

The idol, in a reclining posture, is on view in the Vasantha Mandapam to the right of the Gopuram. Special arrangements have been made for the devotees to queue up and worship from close quarters.



The idol of Athi Varadar was the original presiding deity at the temple which was in worship centuries ago, according to the priests and trustees of the temple. Though made of fig wood, the idol is strong and tough as if made of granite. Fearing desecration during foreign invasion about three centuries ago, the Athi idol was kept concealed obviously by devotees underground.

Later, it was dug up and preserved in a special vault filled with water. Curiously afterwards water stated stagnating around and it as converted into a tank with 24 steps. Since then, the tank has never gone dry.

During the last century, the presence of the idol in the tank was traced and it was brought out of the water and worshipped for a few days and then replaced in the vault in the tank.

Mr. R. T. Thatharchari, Trustee, and Mr. K. Subramanian, Executive Trustee said the previous expositions of the Athi idol were in June 1854, June 1892 and July 1937. The intervening period being about 40 years, they decided to expose the idol this year.

Water was pumped out of the tank, after safely evacuating the fish, and the idol was slowly removed from the vault in the small hours of last Saturday, anointed, cleaned, and exposed.

A bailey bridge has been put up in the tank to enable devotees to go near the mandapam and have a close look at the vault.

Early to-day, homams and special consecration ceremonies , were performed by experts under the guidance of Sri Varadaraja Bhattar. To meet the expenditure, special archanas are being performed by sale of tickets. After 48 days of exposition, Athi Varadar will be ceremoniously taken and redeposited in the vault.

The resemblance to the wooden image and the stone idol (now being worshipped) is so close that the later's ornamental crown fits exactly into the former.



Last modified: 19:38